




# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா


ஒளி - 10 காலாண்டிதழ் அக்டோபர் - டிசம்பர் 2016 கதிர் - 4


# கண்ணீர் துளிகள் பன்னீர் துளிகள் ஆகின்றன



"**கா**தலாகி கசிந்து கண்ணீர் மல்கி" என்று பாடினார்கள் நாயன்மார்களும் சிவபக்தர்களும். காதல் என்பதற்கு அர்த்தம் என்ன என்பதை இதிலிருந்து நாம் புரிந்துக் கொள்ளலாம். இறைவன் மேல் ஏற்பட்ட அந்த பக்தியால் ஏற்பட்டதுதான் காதல், அணை நிரம்பும் பொழுது அதிலிருந்த சில இடங்களில் நீர் கசிந்து வெளியேறுவது போல் மனம் பக்தி பரவசத்தில் திளைத்து ஆனந்தம் பொங்கி, மகிழ்ச்சியில் எல்லைத் தாண்டி நிரம்பி நிற்கும் பொழுது கசிவது என்ற நிலை ஏற்படுகிறது. அதைத்தான் காதல் என்று நாயன்மார்கள் குறிப்பிட்டார்கள். காலமெல்லாம் கட்டிக் காத்து அபயம், அபயம் என்று வந்தபொழுது, வா, வா என்று வாரி அணைத்து வழிநடத்திக் கொண்டு வாழவைத்துக் கொண்டிருப்பவர்தான் சத்குரு சேஷாத்ரி சுவாமிகளும், அன்னை பராசக்தியும். எல்லை மீறிய அன்பால், பாசத்தால், பற்றால், பக்தி பரவசத்தால் அவரை பார்க்கும் பொழுதெல்லாம் கண்ணிலே நீர் மல்குகிறது. கசிந்த காதலின் அர்த்தம் புரிகிறது.

நிலை தடுமாறி குலைந்து சிதைந்து விடுமோ என்ற நிலையிலிருந்து மாற்றி, களிப்பான, சுகமான பாதையை அமைத்து வாழ்க்கையை செப்பனிட்டு, சீர்திருத்தி, சீராட்டி, பாலூட்டி, தாலாட்டி வளர்த்த தாய்போல் அல்லவா நம்மை ரட்சிக்கிறார். சித்தர் கோயிலின் வரலாற்றை பின்நோக்கி சென்று பார்த்தோமானால் உண்மையான கண்ணீரின் பொருள் நமக்கு விளங்கும்.

தவமாய் தவமிருந்து தவசிகளைப் போல் அலைந்து காலச்சக்கரப் புயலில் சிக்குண்டு. உடல், பொருள், ஆவியை உருக்கி கதறிய நாட்கள், கண்ணீர் சிந்திய நாட்கள், ஏராளம் ஏராளம். கண்ணீரில் பலவிதம் உண்டு. சில பேர் நீலிக் கண்ணீர் விடுவார்கள். அது போலிக் கண்ணீர். சில பேர் முதலைக் கண்ணீர் விடுவார்கள். அது வியாபாரக் கண்ணீர். குழந்தை விழுந்து பிரண்டு அழுகிறது அது காரியம் சாதிக்கும் கண்ணீர். மனைவி, கணவனிடம் அழுகிறாள். அது வாழ்க்கைக் கண்ணீர், காதலி, காதலனிடம் அழுகிறாள் அது காதல் கண்ணீர். உடல், பொருள் ஆவியை உருக்கி அந்த ரத்தமே கண்ணீராக மாறி வருவதுதான் ஆன்மீகக் கண்ணீர். எவ்வளவு நாள் மாடம்பாக்கம் பாலாலயத்தில் கதவை சாத்திக் கொண்டு பூஜை செய்து கதறிக் கதறி அழுது இருப்பேன் என்பது உங்களுக்கு தெரியாது. எதற்காக இந்த ஆலயத்தைக் கட்டச் சொன்னீர்கள்? ஏன் என்னை பிசைந்து எடுக்கிறீர்கள்? ஏன் என்னை சோதனைக்கு உள்ளாக்குகிறீர்கள்? உண்மையிலேயே நீங்கள் சித்தர் தானா? இந்த அற்புதம் செய்தீர்கள். அந்த அற்புதம் செய்ததீர்கள் என்று வரலாறு உங்களைப் பற்றி கூறுகிறது. அதெல்லாம் உண்மைதானா? ஒன்றுமே தெரியாமல் இருந்த என்னை தடுத்தாட்கொண்டு, உபதேசம் கொடுத்து, உண்மைப் பொருளை உணர்த்தி, உவப்பில்லா ஆனந்தமான தேனினை சொரிந்து புறம், புறம் திரிய வைத்து விட்டீர்களே! இது நியாயமா? என்று ஆயிரம் முறை சேஷாத்ரி சுவாமிகளிடம் நான் கண்ணீர் மல்க கதறியது உண்டு.

நான் ஒன்றும் முற்றும் துறந்த முனிவன் அல்ல, ஆசா, பாசங்களை விட்ட துறவியும் அல்ல. நம்பி மனைவி இருக்கிறாள். குழந்தை இருக்கிறார்கள். குருவி தலையில் பனங்காயை வைத்ததுப் போல் மாபெரும் சக்தி பீடத்தை அமைக்கவேண்டிய, கட்ட வேண்டிய பொறுப்பை ஆன்மீக பாரத்தை சுமத்தி விட்டீர்களே, இது நியாயமா? அந்த யோக்கியதை எனக்கு இருக்கிறதா? தகுதி இருக்கிறதா? என்றெல்லாம் பலமுறை திரும்பத் திரும்ப அவரிடம் கேட்டேன். அந்தரங்கப் பேச்சு மற்றவர் அறியாதது. அறியாமையால் புரிந்துக் கொள்ளவும் இயலாது. எனக்கும், அவருக்கும் உள்ள உறவுதான் அது. திரும்பத் திரும்ப உருகி, பெருகிய அந்த ஆனந்தக் கண்ணீரில், ஆன்மீகக் கண்ணீரில் பயனாக சத்குருநாதர் வழிகாட்டினர். தடைகளை தகர்த்தெறிந்தார். தனவந்தர்களை கொண்டு வந்து சேர்த்தார். நல்ல உள்ளங்களை ஒருங்கிணைத்தார். உன்னைப் போல் ஒருவனும் உண்டு என்று உணர்த்தினார். உன்னால் முடியும் தம்பி என்று நம்பிக்கை ஊட்டினார். எப்பொழுதும், எந்நேரமும் உடனிருந்தார். சித்தர்களின் பெயர்களை மொழிந்தார். பராசக்தியே, பரம்பொருள் என்பதை உணர்த்தினார். மஹாவித்தையாகிய ஸ்ரீ வித்தையை உபதேசிக்கச் செய்தார் அளவைக் கொடுத்து ஆலயத்தை அழகாக அமைத்து மூன்று குடமுழுக்குகளையும் நடத்தி விட்டார். ரத்தக் கண்ணீர், ஆனந்தக் கண்ணீராகி, ஆன்மீகக் கண்ணீராக மாறிய காரணத்தினால் மாடம்பாக்கத்தில் இன்று சக்திபீடம் நமக்கு கிடைத்திருக்கிறது. மக்களுக்கு மன அமைதி கிடைத்திருக்கிறது. மக்கள் போற்றும் மஹானாக, மனிதனாகப் பிறந்து புனிதராகி ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அங்கே அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். மனம் உருகி பிரார்த்தனை செய்து மக்களின் கண்களில் விடும் கண்ணீர்த் துளிகள் அருள் வெள்ளம் பொங்கும் பன்னீர் துளிகளாக மாறி பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன.

உங்கள் கண்ணீர் துளிகள் பன்னீர் துளிகளாக மாறும் பிரார்த்தனை செய்வோம் பலன் அடைவோம்.

-குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில்
சந்தாதாரராகி
ஸத்குருவின்
திருவருள் பெறுங்கள்

சந்தா
ரூ. 101/-

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரீ குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்''*

பெருமதிப்பிற்குரிய சேஷ பக்தர்களே! மீண்டும் இந்த இதழில் உங்களை சந்திப்பதில் நல்வணக்கத்தோடு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு மனிதனுக்கு வாழ்வில் தன்னம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் மிக மிக முக்கியம். ஒரு மனிதன் தன்னம்பிக்கையோடு மிகச் சிறப்பாக செயல்படும்போது அவனது எண்ணங்கள் மிக எளிதாக நிறைவேறுகின்றது. தன்னம்பிக்கை குறையும்போது எல்லாம் தலைகீழாக மாறுகின்றது. அப்போது என்ன செய்வதென்று புரியாத குழப்பம் ஏற்படுகின்றது. அப்போதுதான் தெய்வ நம்பிக்கையைப் பற்றிய சிந்தனை ஏற்படுகின்றது. ஆனால் நாம் அப்படி இருக்கக் கூடாது. தன்னம்பிக்கையோடு தெய்வ நம்பிக்கையையும் சேர்த்து வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தன்னம்பிக்கை குறையும்போது அதை தெய்வ நம்பிக்கை கை கொடுத்து தூக்கி விட்டு நிலைமையை சரிசெய்யும். வாழ்வின் நிலையை சமப்படுத்தும்.

நமது பதிணென் சித்தர் சக்திபீடத்திற்கு வந்து சித்தர்களையும், தெய்வங்களையும் சத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளையும் வழிபட்டால் முதலில் அவர்கள் நமக்கு தன்னம்பிக்கை ஒளியை கூட்டுவார்கள். அருள்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடும். தன்னம்பிக்கை இல்லாமையால் ஏற்படும் இயலாமை அடியோடு நீங்கும். தன் முயற்சி மெருகேறும். முடியாத காரியங்கள் எல்லாம் நம்மாலேயே முடித்து வைக்கப்படும். பதினெண் சித்தர் சக்திபீடம் என்பது வெறும் மாயமந்திரத்தால் மாங்காய் விழவைக்கக் கூடிய இடம் அல்ல. உள்ளொளியை பெருக்கி உண்மையை உணரவைக்கக்கூடிய ஸ்தலம். மனமுருகி இங்கு வந்து வேண்டினால், விண்ணில் கிடைக்கும் சொர்க்கம் மண்ணிலேயே கிடைக்கும். வளமான வாழ்க்கையும், வரம்புக்குள் அடங்கிய நல்ல வாழ்க்கைப் பயணமும் நமக்கு கிடைக்கும். சித்தர்கள் நமக்கு வழிகாட்டுவார்களே அன்றி வாரித் தூக்கிச் சென்று அந்த இடத்தில் சேர்க்க மாட்டார்கள். பாதை அவர்களுடையது. பயணம் நம்முடையது. சித்தர்கள் அருள் இருந்தால் பாதையில் பயம் இருக்காது. பயணத்தில் தடை ஏற்படாது.

பஞ்ச பூதங்களும் சித்தர்களிடத்தில் அடக்கம்.
நம் பதிணென் சித்தர் சக்திபீட சித்தர்கள்
நெருப்பாக இருந்து சூடேற்றுவார்கள்!
நீராக இருந்து குளிரூட்டுவார்கள்!
மண்ணாக இருந்து வாழ வைப்பார்கள்!
விண்ணாக இருந்து வழிகாட்டுவார்கள்!
காற்றாக இருந்து உயிரூட்டுவார்கள்!

ஆகவே பஞ்ச பூதங்களும் அடங்கிய நம் பதிணென் சித்தர்கள், சக்தி பீடத்தில் பஞ்சபூத சாந்தி வேள்வி வரும் 9-10-2016 அன்று நடைபெறுவதால் அனைவரும் கலந்துகொண்டு தெய்வங்களையும் வழிபட்டு தன்னம்பிக்கை பெறுவோம், தன்னிகரில்லா வாழ்வை அடைவோம்.

மீண்டும் அடுத்த இதழில் உங்களை சந்திக்கிறேன். மருதபரணி

## குருவின் ஆசிகள்

முருகன் ஒரு வண்டி மாடு வைத்து ரயிலடிக்கு சவாரி ஓட்டுவான். திருவண்ணாமலை சாது சத்திரம் பக்கத்தில் அவன் ஓட்டு வீடு.

ஒருநாள் சுவாமி அந்த பக்கமாக நடந்து வந்தவர் அவன் வீட்டில் புகுந்து விட்டார். முருகன் அம்மா உண்ணாமலை அவரை வரவேற்றாள்.

''பசிக்குது. கூழு வச்சிருக்கியா. குடு''

''ஒரு மிடாவில் இருந்த கூழை மோர் விட்டு கலக்கி ஒரு பெரிய பாத்திரத்தில் உப்பு போட்டு கொடுத்தாள். முழுதும் குடித்துவிட்டு ''இன்னும் கொஞ்சம்'' என்கிறார்.

ரெண்டாவது தடவையும் பாத்திரம் முழுதும் குடித்தார்''

''டே முருகா எழுந்திருடா சாமி வந்திருக்கு கும்பிடு '' என்று திண்ணையில் தூங்கிய முருகனை எழுப்பினாள் .

தூக்க கலக்கத்தில் அவன் எழுந்து ''தூங்கிட்டேன் சாமி '' என வணங்கினான்

''ஏன் வண்டி ஓட்டலை இன்னிக்கு?''என்கிறார்.

''வியாபாரம் இல்லை சாமி. மாட்டுக்கு தீனி வாங்க கூட காசு போதலை. வண்டியிலே ரிப்பேர் இருக்கு. சரி பண்ண வழியில்லையே சாமி. ஒன்னும் தெரியாம முழிக்கிறேன்''

''நாளைக்கே வண்டியை மாட்டை வித்துடு. உனக்கு இனிமே அது வேண்டாம். உடனே வித்துடு '' என்று சொல்லிவிட்டு போனார்.

முருகன் அன்றே ஒரு ஆசாமியிடம் வண்டியையும் மாட்டையும் கை மாற்றி விட்டான்.

ஒரே வாரத்தில் முருகனுக்கு கல்யாணம் ஆச்சு. வெகு வருஷங்களாக பார்க்காத ஒரு நெருங்கிய உறவுக்காரர் தனது ஒரே பெண்ணை முருகன் வீடு தேடி வந்து நிச்சயம் பண்ணி கல்யாணம் நடந்தது. சென்னையில் ஒரு இடத்தில் வசதியான குடும்பம். பல ஆயிரங்கள் மதிப்புள்ள (இப்போது லக்ஷமோ கோடியோ) அந்த சொத்துக்கு முருகன் தான் அதிபதி. நிறைய நகைகள் வேறு. உண்ணாமலையின் கூழுக்கு இப்படி ஒரு பரிசா!!

*- குழுமணி நாராயண சாஸ்திரி எழுதிய புத்தகத்திலிருந்து ரவிசங்கர்*

## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

**அக்டோபர் 2016**

1 ஹஸ்தம்
1-10 நவராத்திரி விழா
10 ஸரஸ்வதி பூஜை
11 விஜய தசமி
15 பௌர்ணமி
29 தீபாவளி பண்டிகை
30 அமாவாசை

**நவம்பர் 2016**

5 கந்த சஷ்டி
14 பௌர்ணமி
24 ஹஸ்தம்
29 அமாவாசை

**டிசம்பர் 2016**

13 பௌர்ணமி, கார்த்திகை தீபம்
21 ஆராதனை விழா தொடக்கம்
22 ஹஸ்தம், மஹான் சேஷாத்ரி ஸ்வாமிகள் மஹா ஆராதனை விழா
28 அமாவாசை
29 அனுமந் ஜயந்தி

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**

அமைந்துள்ளது.
முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408,
22280407, 29710972
பாலாலயம் : 2228 1337
பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
குரோம்பேட்டையிலிருந்து S3 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE ADDRESS**

A-11, Room No. 8, Ground Floor,
Shahid Bhagat Singh, CHS Ltd.,
Bindra Complex, Mahakali Caves
Road, Near Holi Spirit Hospital,
Andheri, Mumbai - 93. Ph : 28387116



மாடம்பாக்கம் சக்தி பீடத்தில் குருஜி
அவர்கள் தலைமையில்உலக
நன்மைக்காக / பருவ மாற்றத்தால்
ஏற்படும் விபரீத விளைவுகளை
தடுக்க சித்தர்கள் அருள்வாக்கின்படி

**பஞ்சபூத சாந்தி வேள்வி**
**9-10-2016 ஞாயிற்றுக்கிழமை**

ஹோமம் தொடங்கும் நேரம் காலை 7.00 மணி
அனைவரும் வருக! அருளாசி பெறுக!

# ராசி பலன்கள்

## அக்டோபர் - டிசம்பர் 2016

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 6ம் இடத்தில் குருவும் அஷ்டமசனியின் ஆதிக்கம் உள்ளது. எங்கும், எதிலும் எச்சரிக்கைத் தேவை. சில அன்பர்களுக்கு புதிய சொத்துக்கள் சேரும், கணவன், மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்களுக்கு காதல் கைகூடும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் கிடைக்கும். கலைஞர்களுக்கு தொழிலில் புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கை உண்டு. விவசாயிகளுக்கு நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 6ம் இடத்தில் குரு இருப்பதால் உடல் நலம் பாதிக்கப்படலாம். குழந்தைகளை பற்றி கவலைகள் கூடும். பொருளாதாரத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். வங்கி, அரசாங்க உத்தியோத்தில் இருப்பவர் கவனத்துடன் இருக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் விரிவாக்கம் செய்ய வேண்டாம். பெண்கள், சக ஆண்களுடன் எச்சரிக்கையுடன் இருக்கவும். மாணவர்கள் உடல் நலத்தை கவனிக்க வேண்டும். கலைஞர்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு உடன்பிறப்புகளால் தொல்லை உண்டு. விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை , 28 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். புதிய மனை அல்லது வீடு வாங்கும் யோகம் தெரிகிறது. திருமண விஷயத்தில் நிதானம் தேவை. பிடிவாத குணத்தை விடவும். கணவன்-மனைவி உறவு திருப்திகரமாக கிடைக்கும். பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். ரியல் எஸ்டேட், கட்டிட பொருட்கள் வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு தந்தை வழியில் சொத்து கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வித் தடை அகலும். அரசியல்வாதிகளுக்கு சகோதரர்களால் லாபம் உண்டு. விவசாயிகள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ரமேரு, திங்கட்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாயகம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். கேசரி யோகம் ஏற்பட்டுள்ளது. திருமணத் தடை நீங்கும். சொத்துச் சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு சிறுநீர்ப்பை கோளாறு ஏற்பட்டு நீங்கும். மாணவர்களுக்கு குழப்பமான மனநிலை ஏற்படும். கலைஞர்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படலாம். எச்சரிக்கை. அரசியல்வாதிகள் குடும்பத் தகராறில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். காதல்-திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அபிவிருத்தி ஏற்படும். பெண்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். வெள்ளித்திரை கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு நல்ல பதவி மாற்றம் ஏற்படும். விவசாயிகள் புதிய முதலீடு செய்யலாம். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5ம் தேதி வரை, 30 முதல் 3 டிசம்பர் வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருமங்கல யோகம் ஏற்பட்டுள்ளது. புதிய மனை அல்லது வீடுவாங்கும் யோகம் தெரிகிறது. காதல்-திருமணம் கைகூடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பணியாளர்கள் நல்ல ஆதாயம் அடைவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பெண்களுக்கு மர்ம ஸ்தானங்களில் கோளாறு ஏற்படும். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சின்னத்திரை கலைஞர்களுக்கு புதிய தொடர்பு ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பிரயாணத்தின்போது கவனம் தேவை. விவசாயிகளுக்கு வெளிநாட்டு தொடர்பால் லாபம் உண்டு. பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்கள் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ர மஹாமேரு, பௌர்ணமி, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாயகம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 28 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். 6ல் சனி இருப்பதால் எங்கும் வெற்றி கிடைக்கும். பணியாளர்களுக்கு தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய தொழில் மூலம் லாபம் அடைவார்கள். குழந்தைகளால் பெண்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பிரயாணம் ஏற்படும். புதிய யுக்தி மூலம் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகனி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். தடைப்பட்ட காரியங்கள் கைகூடும். திருமணத் தடை அகலும். பணியாளர்களுக்கு மனதில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி உறவில் விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. பெண்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள், புதிய யுக்தியை கையாண்டு மதிப்பெண் பெறுவார்கள். சின்னத்திரை கலைஞர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறர். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். காதலைத் தள்ளிப் போடுவது நல்லது. பணியாளர்களுக்கு அரசாங்கத்தால் லாபம் உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்கள் மற்றவர்கள் பேச்சை கேட்க வேண்டாம். மாணவர்களுக்கு மதிப்பெண் கூடும். கலைஞர்களுக்கு குடும்பப் பிரச்சனை ஏற்பட்டு நீங்கும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். விவசாயிகள் புதிய பொருட்களை வாங்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ரமஹாமேரு, பௌர்ணமி, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை, 30 முதல் 1 ஜனவரி தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பணமுடக்கம் ஏற்படும். இளைய சகோதர, சகோதரிகளிடம் மனக்கசப்பு ஏற்படும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்களுக்கு கல்வித் தடை அகலும். சின்னத் திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். விவசாயிகளுக்கு கௌரவ பதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பேச்சில் கவனம் தேவை. காதல் விஷயத்தில் தலையிட வேண்டாம். கணவன், மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். பணியாளர்கள் பொருளாதாரத்தை திட்டமிட வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். எச்சரிக்கை. சில பெண்கள் காதல் தோல்வியால் வருத்துவார்கள். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். கடல் பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. விவசாயிகளுக்கு கடன் தொல்லை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே இருக்கும். பரிகாரம் தேவை.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பலகீனமாக உள்ளார். மனக்குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பொருளாதார முடக்கம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். பணியாளர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. சக பெண்களால் பெண்களுக்கு மனநிம்மதி கெடும். மாணவர்கள் அதிக கவனம் செலுத்தினால் மதிப்பெண் கூடும். வெள்ளித்திரை கலைஞர்களுக்கு லாபம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாக அமையும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ரமஹாமேரு, பௌர்ணமி, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

குருஜி கே.வி.எல்.என். சர்மா

# சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடி உள்ளது. திருமணத் தடை நீங்கும். காதல் கைகூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய நட்பு ஆதாயம் தரும். அரசியல்வாதிகள் குழந்தைகளால் மகிழ்ச்சியடைவார்கள். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீடகணபதி, சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்துள்ளார். மனச்சோர்வு ஏற்படும். இருப்பினும் குருவின் பலம் கூடியிருப்பதால் காதல்-திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். பணியாளர்களுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கடன் நிவாரணம் ஏற்படும். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள் விவசாயிகளுக்கு பெற்றோர்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் அதிக நற்பலன்கள் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. திருமணத்தடை நீங்கும். புதிய திருப்புமுனை ஏற்படும். தந்தை, மகன் இடையே பிரச்சினை ஏற்பட்டு விலகும். பணியாளர்களுக்கு சொத்துச் சேர்க்கை உண்டு. கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்களுக்கு திடீர் பொருள்சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு எதிர்பாராத நல்ல செய்தி வரும். சில அரசியல்வாதிகளுக்கு அறுவை சிகிச்சை ஏற்படலாம். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்மத்தில் குருபகவான் உள்ளார். தீய சக்திகளின் ஆதிக்கம் தெரிகிறது. எங்கும், எதிலும் நிதானம் தேவை. பணியாளர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண முடக்கம் ஏற்படும். எச்சரிக்கை. பெண்களுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்து வாங்குவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்ம குருவினால் மனவாட்டம் ஏற்படும். வீட்டில் இருந்தாலும் காட்டில் இருப்பது போல் தோன்றும். திருமணத்தை தள்ளிப் போடுவது நல்லது. கணவன்-மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். பணியாளர்களுக்கு உடலில் பிரச்சனை ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண நெருக்கடி ஏற்படும். பெண்கள் ஆடம்பர செலவுகளை குறைக்க வேண்டும். மாணவர்களுக்கு ஓரிரு பாடங்களில் மதிப்பெண் குறையும். கலைஞர்களுக்கு இளைய சகோதர, சகோதரிகளால் விரயம் ஏற்படும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் தண்டிக்கப்படுவார்கள்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : பச்சைக்கல் மஹாமேரு, ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சோதனைகள் ஏற்பட்டு விலகும். குழந்தைகளால் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். திருமணத்திற்கு அடித்தளம் அமையும். பணியாளர்கள் சூழ்ச்சியில் மாட்ட வேண்டாம். போட்டியால் வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு லாபம் குறையும். பெண்களுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்கள் பிரயாணத்தின்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். குழந்தைகளால் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் உண்டு. விவசாயிகளுக்கு வங்கியின் உதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீடகணபதி சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். குடும்பத்தில் சுப விரயங்கள் ஏற்படும். புதுமனை புகுவிழா நடக்கும். பேச்சில் கவனமாக இருப்பது நல்லது. கணவன் மனைவி உறவில் திருப்திகரமாக இருக்கும், பணியாளர்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய தொழில் ஆரம்பமாகும். பெண்களுக்கு மருத்துவச் செலவுகள் உண்டு. மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல திருப்பம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சுப விரயங்கள் ஏற்படும். காதல்-திருமணம் கைகூடும். பிரயாணத்தின்போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத பணம் கிடைக்கும். பெண்களுக்கு குழந்தைகளால் கவலை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். விவசாயிகளுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். தடைபட்ட திருமணம் கூடிவரும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு அதிக மருத்துவச் செலவு ஏற்படும். அரசியல்வாதிகள் எதிரிகளின் தொல்லைகளுக்கு ஆளாவார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். நீண்ட நாள் தடைப்பட்ட காரியங்கள் அனுகூலமாகும். காதல்-திருமணம் கைகூடும், கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு மனைவியை தவிர மற்ற பெண்களால் இடையூறு ஏற்படும். எச்சரிக்கை. விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பலம் கூடியுள்ளது. கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமணத்தடை நீங்கி திடீர் திருமணம்நடக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் இருக்கும். பெண்கள் பொருள் சேர்க்கையால் மனமகிழ்ச்சி அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் திருப்புமுனை ஏற்படும். சின்னத்திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத சொத்துச் சேர்க்கை உண்டு. விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : பைரவர், ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். நினைத்த காரியம் நிறைவேறும். சில அன்பர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். பணியாளர்களுக்கு பணி உயர்வு கிட்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனதிற்கினிய நிகழ்ச்சி நடக்கும். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணத்தால் ஆதாயம் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு தொடர்பால் அதிக லாபம் கிடைக்கும். விவசாயிகளுக்கு புதிய நிலம் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும், எங்கும் நிதானம் தேவை. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பணியாளர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கணவன் மனைவி உறவில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு சின்னத்திரை ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி மாற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும் நிதானத்துடன் கடைபிடிக்க வேண்டும். கணவன்-மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம். பணியாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு முடிவுகளை எடுக்கவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு தொழிலில் மாற்றம் ஏற்படும். பெண்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு திடீர் வெளிநாட்டு பயணம் கிட்டும். ஊனமுற்ற கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பதவி பறிப்பு உண்டு. விவசாயிகளுக்கு பூச்சிகளால் பயிர் நாசமாகும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும், எங்கும் எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும். கணவன் மனைவி உறவு சாதாரணமாகவே இருக்கும். காதல் திருமணத்தில் அவசரம் காட்ட வேண்டாம். பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சியில் ஈடுபடவேண்டாம். பெண்களுக்கு பிரிந்த உறவினர்கள் ஒன்று கூடுவார்கள். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகள் பிரயாணத்தின்போது கவனமாக இருக்க வேண்டும். விவசாயிகள் கடன் வாங்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை ராசிக்கு விழுகிறது. அஷ்டமராகுவும், 2ம் இடம் கேதுவும் அவ்வப்பொழுது மனச் சலனங்களை கொடுப்பார்கள். காதல்-திருமணம் கை கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. பெண்களுக்கு இல்லத்தில் சுபச் செலவுகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு விருதுகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக் கிழமை, நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 11ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராசியை குருபார்ப்பதால் சோதனைகள் தவிடு பொடியாகும். உடல் ஆரோக்கியம் கூடும். வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணவரவு கூடும். பெண்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்குள் மஹான்களின் ஆசிகள் கிடைக்கும். தர்ம சிந்தனை கூடும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். வீண் மனக்குழப்பம் ஏற்பட்டு அகலும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். மஹான்களின் அருளாசிகள் உண்டு. வீடு, மனை வாங்கும் யோகம் தெரிகிறது. காதல்-திருமணம் கை கூடும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு கிடைக்கும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பிடிவாத குணத்தைக் குறைத்துக் கொண்டால் பெண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படும். சின்னத்திரை கலைஞர்கள் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை அகலும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ர மஹாமேரு, பௌர்ணமி, திங்கட்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதார முடக்கம் ஏற்படும். முடிவுகளை தள்ளிப் போடுவது நல்லது. கணவன், மனைவி உறவில் பிரச்சனை ஏற்பட்டு அகலும். பணியாளர்கள் பண விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு பிதுர்ராஜ்ஜிய சொத்துகள் சேரும். மாணவர்கள் அதிக எச்சரிக்கையுடன் படிக்கவேண்டும். சின்னத்திரை கலைஞர்கள் பாதிக்கப்படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு குடும்பத்தில் சொத்துத் தகராறு ஏற்படும். விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனக்குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். கணவன்-மனைவி உறவு சாதாரணமாகவே இருக்கும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. பணியாளர்களுக்கு உழைப்பு அதிகமாகவும் பலன் கம்மியாகவும் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு புகுந்த வீட்டில் நல்ல பெயர் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு தொழிலில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். விவசாயிகளுக்கு பிரயாணத்தில் லாபம் உண்டு. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீடகணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 8ம் இடத்தில் குரு இருக்கிறார். பொருளாதார சிக்கல் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. திருமண முடிவில் அவசரம் காட்ட வேண்டாம். கணவன், மனைவி இடையே சலனம் ஏற்பட்டு அகலும். பணியாளர்கள் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கும். கலைஞர்களுக்கு தொழிலில் புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகள் தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு பூச்சித் தொல்லை உண்டு. பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்கள் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

## மீனம்



(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறர். சில அன்பர்களுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். காதல்-திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு சுபச் செய்தி வந்து சேரும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு ஆபரணச் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் நல்ல லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக் கிழமை, ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை, 29ம் தேதி முதல் 31ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திரஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை ராசிக்கு விழுவதால் சுபகாரியங்கள் நடக்கும். திருமணம் கைகூடும். காதலில் வெற்றி கிடைக்கும். பணியாளர்களுக்கு வெற்றி கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனநிம்மதி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு நிர்வாகத் திறமை கூடும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ரமஹாமேரு, ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். நினைத்த காரியம் நடக்கும். காதல்-திருமணம் கைகூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு திடீர் பொருள் வரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். சின்னத்திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கும். விவசாயிகளுக்கு புதிய வாகனச் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.


அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.


**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**


| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

# நடந்து முடிந்த விழாக்கள்

## விநாயக சதுர்த்தி நிகழ்ச்சிகள்



## கிருஷ்ண ஜெயந்தியில் அலங்காரம்



## குரு பெயர்ச்சி ஹோமத்தில் பூர்ணாஹுதி





## ஆடிப்பூர திருவிழா நாள் 5-8-2016

வெள்ளிக்கிழமையன்று அகண்ட லலிதா சகஸ்ரநாம பாராயணம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.
ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாம பாராயணத்தில் பங்கேற்ற சுவாஸினிகளுக்கு சௌபாக்கிய திரவியங்கள் வழங்கப்பட்டது.

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**அன்பார்ந்த சேஷ ஒளி வாசகர்களே**

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.


ஸ்ரீ சேஷ ஒளி
திருவருட்சுடர்

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

## சித்தர் சக்திபீடத்தில் விழாக்கள்



நமது சக்திபீடத்தில் சிறிய விழாக்கள் (அறுபதாம் கல்யாணம், பூணூல், சீமந்தம், வளைகாப்பு, காது குத்தல்) நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத்தினர் செய்துள்ளனர்.

ஏழை எளியவர்களுக்கு உரிய சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி பயனடையுங்கள்.
எங்கு நடத்துவது. எப்படி செய்வது என்று குழப்பம் அடைய வேண்டாம்.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 94440 26989
(செயலாளர் அறக்கட்டளை)

# குரு மகிமை

நமது இந்து சமயம் மனிதன் முதன்மையாகப் போற்றி வணங்கத்தக்கவர் என மாதா, பிதா, குரு, தெய்வத்தை வகுத்துக் கொடுத்துள்ளது. நாம் நினைவு தெரிந்த நாளில் இருந்து தாய், தந்தையரை தெய்வமாக எண்ணி, அவர்கள் நம்மை வணங்க வைத்த இறைவனிடமும் பக்தி செலுத்தி வருகிறோம். ஆனால் குரு என்று கூறும்பொழுது, நமது ஸ்தூல குருவால் மட்டுமே சூக்ஷமாக விளங்கும் ஸத்குருநாதரிடம், நமக்கு உறவு ஏற்படுத்த முடிகிறது. தெய்வ அவதார புருஷர்கள்கூட, தனது குருநாதர்களை, தனக்கும் மேலாக போற்றி வணங்கியிருக்கிறார்கள். சிலர் தெய்வங்களையும், இயற்கையையும் கூட குருவாக துதிப்பதுண்டு. எனினும், இக்கலியுகத்தில் அவதரித்த எண்ணற்ற அற்புத சக்தி கொண்ட மகான்களையே, இன்றைய நிலையில் மக்கள் குருவாக போற்றி வருகிறார்கள். அத்தகு உலகமகா ஸத்குருவாக நம் பதினென் சித்தர் சக்தி பீடத்தில் வீற்றிருக்கும், ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளை குருவாகக் கொண்டு வழிபட்ட பக்தர்கள், வாழ்வில் சந்தித்த அற்புதங்கள் எண்ணில் அடங்காதவையாகும். நமது ஸத்குருவை போற்றி, புண்ணியம் பெற, நமது ஸ்தூல குருவான, குருஜி கே.வி.எல்.என். சர்மா அவர்கள், குருநாதர் என்ற ஒரு குடையின் கீழ், நம் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒருங்கிணைந்துள்ளார்கள். அத்தகு ஸ்தூல குருவாக விளங்கும் குருஜி அவர்களின் வாக்குப்படி, நாம் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவோமானால், முடியாதது என்பது எதுவுமில்லை. வானம் வசப்படும், வாழ்க்கை வளம்பெறும், வெற்றி கை கூடும், ஆரோக்கியம் மேம்படும், ஆனந்தம் கூடிவரும் என்பது திண்ணம்.

– உமாபரணி

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினென் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

# "பக்த ரட்சகர் குருநாதர்"



1992 ஏப்ரல் மாத இறுதியில், குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக நிரந்தரமான உத்தியோகத்திலிருந்து ஓய்வு (VRS) பெறவேண்டியதாயிற்று. வருமானம் நின்றுவிட்டபடியால், வறுமையின் பிடியில் சிக்கினோம். மூன்று பெண் குழந்தைகள், ஒரே பையன், இவர்கள் படிக்க வேண்டும். இதற்கு இடம் கொடாத நிதி நிலைமை. பல நிறுவனங்களுக்கு, விளம்பரங்கள் பார்த்து, வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத்தேர்விற்கு அழைத்த நிறுவனங்கள்கூட, தேர்வில் வெற்றி பெற்றபின் ரூபாய் ஆயிரம் முதல் ஆயிரத்து ஐநூறு வரைதான் சம்பளம் தர முன்வந்தனர். சில மாதங்கள் தற்காலிகமாக ஒருவரிடம் வேலைக்குச் சென்றபிறகு, அதே வருடம் நவம்பர் மாத இறுதியில் எனது மகளுடன் திருவண்ணாமலை சென்று குருநாதரின் சன்னதியில் அவரை மனதாரப் பிரார்த்தித்து, அண்ணாமலையாரையும், உண்ணாமுலை அம்மனையும் வேண்டிக் கொண்டு, பரணி தீபம் தரிசித்து, கிரிவலம் வந்து, மலை உச்சிக்குச் சென்று திரும்பி, மாலையில் மஹாதீபம் தரிசனம் செய்து, மறுநாள் பெங்களூர் செல்ல பஸ் நிலையம் வந்தோம்.

பெங்களூர் செல்லும் அனைத்து பஸ்களும் வேலூர் வரைதான் செல்லும் என்று கூறிவிட்டனர். கடைசியில் பெங்களூர் செல்லும் ஒரு பஸ்ஸில் ஏறியபோது, அதில் கால்வைக்கக்கூட இடமில்லாமல் இருந்தது. இறங்கி இன்னொரு பஸ் வருமா என்று காத்திருந்த போது, எனது பர்ஸ் பறிபோய்விட்டிருந்தது. நல்லவேளையாக சட்டை கைமடிப்பிற்குள் கொஞ்சம் பணம் இருந்தது. நமது கஷ்டத்தை பர்சைப் பறித்துச் சென்றதுபோல், மஹானே பறித்துச் சென்றுவிட்டதாக எண்ணினோம்.

அச்சமயம், ஒரு இளைஞர் வந்து, "நீங்கள் பெங்களூர் செல்ல வேண்டுமா? என்னுடைய இரண்டு இடங்களை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்ற எங்களை இழுக்காத குறையாக அழைத்துச் சென்று அந்த இரு இடங்களில் அமர்த்திவிட்டு, நாங்கள் நன்றி சொல்லும்முன் கூட்டத்தினுள் சென்று மறைந்துவிட்டார்.

இது மஹானின் அருள்தான் என்று அறிந்து, மஹானுக்கு மனதார நன்றிகூறி, பெங்களூர் வந்து வீட்டிற்கு வந்தால், அங்கு இன்னொரு அதிசயம் காத்திருந்தது. நான் விண்ணப்பத்திருந்த, பல கம்பெனிகளுள் ஒன்றிலிருந்து, ஒரு ஊழியர் என் வீட்டைத் தேடிவந்து நேர்முகத் தேர்விற்கான அழைப்புடன் வந்து, நாங்கள் ஊர் திரும்பியவுடன் வரச்சொல்லிவிட்டுச் சென்றிருந்தார்.

அவர் விட்டுச் சென்றிருந்த கடிதத்துடன் மறுநாள் நேர்முகத் தேர்விற்குச் சென்றபோது, கம்பெனி நிர்வாகிகள் என்னுடன் சில நிமிடங்களே பேசிவிட்டு, "நீங்கள் இக்கம்பெனிக்கு மேனேஜராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள் நாளை மறுநாள் முதல் (1-12-1993) வேலைக்கு வரலாம். உங்களது மாதச் சம்பளம் ரூ. மூவாயிரம். மூன்று மாதங்கள் கழித்து திறமை பார்த்து உயர்த்துவோம்" என்று கூறி, வேலை நியமன உத்தரவை என்னையே டைப் செய்யச் சொல்லி என்னிடம் தந்துவிட்டனர். ஆகவே டிசம்பர் முதல் தேதியிலிருந்து வேலைக்குச் செல்ல ஆரம்பித்தேன். கம்பெனியும் வீட்டிலிருந்து அதிக தொலைவில் இல்லை.

அப்போதே எனக்கு வயது 52 ஆகியிருந்தது. 17 ஆண்டுகள் கழித்து எனது 69 வயது வயதில், மாதம் ரூ. 40,000/- சம்பளத்துடனும், மற்ற ஓய்வு ஊதியங்களுடனும் ஓய்வு பெற்றேன் என்றால் பக்த ரட்சகரான குருநாதர் அருளால் அன்றி, வேறு என்னவாக இருக்க முடியும்!

மஹானின் பொற்பாதங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்களுடன்.

ஆர். வேணுகோபாலன், பெங்களூர்

### சபரிவார ஸ்ரீ சக்ர மஹாமேரு பதினெண் சித்தர்கள் சக்திபீடத்தின்

# நவராத்திரி விழா அழைப்பிதழ், மாடம்பாக்கம்

### 2016, அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் 10ம் தேதி வரை

தாம்பரம் அருகில் உள்ள மாடம்பாக்கத்தில் விசேஷமாக அமைந்துள்ள ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரி சக்திபீட பிருந்தாவனத்தில் நவராத்திரியை முன்னிட்டு **ஸ்ரீ சக்ர மகாமேருவிற்கு 10 நாட்களும் காலை 8 மணிக்கு பீடாதிபதி குருஜி கே.வி. எல்.என். சர்மா அவர்களால் ஸ்ரீ வித்யா நவாவரண பூஜை** மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது.

**நவாவரண பூஜை ஒரு நாள் செலவு ரூ. 1000/-  நவாவரண பூஜை சங்கல்ப கட்டணம் ரூ. 100/-**

அண்டங்களுக்கு எல்லாம் நாயகியாக அகிலாண்டேஸ்வரியாக ஸ்ரீ சக்ர நாயகியாக விளங்குபவள் ஸ்ரீ லலிதா மஹா திரிபுர சுந்தரி. இவளை வழிபட்டால் ஸ்ரீசக்ரத்திலே இருக்கும் தேவி நம் இல்லத்தில் என்றென்றும் வாசம் செய்து வற்றாத செல்வத்தையும் எல்லாவித வளங்களையும் அளித்துக் கொண்டேயிருப்பாள். நவராத்திரி ஒன்பது நாளும் விசேஷ அலங்காரம் செய்யப்படும்.

**அம்பாளுக்கு நாளொன்றுக்கு புடவை 9 கஜம் ரூ. 1000/-  ராஜகாளி அம்மனுக்கு நாளொன்றுக்கு புடவை 6 கஜம் ரூ. 750/-**

விசேஷ அலங்கார விபரம் **அம்பாளுக்கு ஒருநாள் விசேஷ அலங்கார செலவு ரூ. 1250/-**

**1-10-2016 சனிக்கிழமை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அலங்காரம்**
**2-10-2016 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ மஹிஷாசுர மர்த்தினி அலங்காரம்**
**3-10-2016 திங்கட்கிழமை ஸ்ரீ மீனாட்சி அலங்காரம்**
**4-10-2016 செவ்வாய்கிழமை ஸ்ரீ தனலக்ஷ்மி அலங்காரம்**
**5-10-2016 புதன்கிழமை ஸ்ரீ கஜலக்ஷ்மி அலங்காரம்**
**6-10-2016 வியாழக்கிழமை ஸ்ரீ அபிராமி அலங்காரம்**
**7-10-2016 வெள்ளிக்கிழமை ஸ்ரீ அன்னபூரணி அலங்காரம்**
**8-10-2016 சனிக்கிழமை ஸ்ரீ சாகம்பரி அலங்காரம்**
**9-10-2016 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ராஜராஜேஸ்வரிஅலங்காரம்**
**10-10-2016 திங்கட்கிழமை ஸ்ரீ சரஸ்வதி அலங்காரம்**

### சண்டி ஹோமத்திற்கு தேவையான சாமான்கள்

| | | |
|---|---|---|
| பூர்ணாஹுதி | | |
| பட்டுப் புடவை | 9 கஜம் | 4,500 |
| திருமாங்கல்யம் | 2 கிராம் | 6,000 |
| மெட்டி, கொலுசு | 1 ஜோடி | 3,000 |
| சுவாசினி புடவை | 9 கஜம் | 4,000 |
| கன்யா பாவாடை | 1 செட் | 2,000 |
| வடுகர் வேஷ்டி | 1 செட் | 500 |
| மஞ்சள் கிழங்கு | 15 கி | 5,000 |
| நெய் | 10 கி | 3,000 |
| விருட்சிபூ | 8 கி | 3,000 |
| வெண்குங்கிலியம் | 8 கி | 1,000 |
| சௌபாக்ய திரவியம் | 125 செட் | 4,500 |
| வெண்கடுகு | 3 கி | 500 |
| அம்பாள் | | |
| பட்டுப் புடவை | 9 கஜம் | 4,000 |
| ராஜகாளி அம்மன் | | |
| பட்டுப் புடவை | 6 கஜம் | 3,000 |
| பூர்ணாஹுதி | | |
| மாலை, புஷ்பங்கள் | | 20,000 |
| பழங்கள் | | 6,000 |
| வைதீக செலவு | | 30,000 |
| அன்னதானம் | | 20,000 |

## சண்டி ஹோமம் 2-10-2016

ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களையும் தன்னுள்ளே அடக்கி உலகத்தையே படைத்தவள் தான் ஆதிபராசக்தி. அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இவ்வுலகத்தைக் காப்பாற்றி இயற்கையின் சீற்றத்தை தணித்து மழை பெய்து மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் என்றென்றும் வாழ அந்த ஆதிபராசக்தியை குறித்து நடத்தப்படும் ஹோமம். சொத்து தகராறு, கோர்ட் வழக்குகள், பூர்வஜென்ம ஸ்திரீ தோஷம், கன்யா தோஷம் இதனால் திருமணத் தடை, மன அமைதி குறைவு, மனசோர்வு, நாக தோஷத்தால் ஏற்படும் பிரச்சனை, குழந்தையின்மை, மலட்டுத் தன்மை, கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு, கடன் தொல்லை, எவ்வளவு உழைத்தும் பலன் இல்லாமை, பதவி உயர்வில் தடை, குழந்தைகள் படிப்பு, உத்தியோகத் தடை இவை அனைத்தும் இந்த ஹோமத்தில் பங்கேற்றால் விலகி வீட்டில் சகல ஐஸ்வர்யங்களும் பெருகும்.


**ஸ்ரீ சேஷ ஒளி**
திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

வெளியீட்டாளர்
**திரு. கே. ராமசுப்ரமணியன்**

உதவி ஆசிரியர்
**திருமதி. என். ஜானகி**

கௌரவ ஆசிரியர்கள்
**திரு. மருதபரணி**
**திருமதி. உமாபரணி**

அலுவலக உதவியாளர்
**திருமதி. பி. லக்ஷ்மி**

வடிவமைப்பு
**திருமதி. பிரேமா**

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**பால் விநியோகம் :** பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

**இதனால் ஏற்படும் பலன்கள் :**

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நித்திய அன்னதானம் :** சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



**தானத்தில் சிறந்தது அன்னதானம்**
**அன்னதானம் செய்வோம்**
**ஆனந்தம் அடைவோம்**

## மஹான் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மஹா ஆராதனை விழா

### டிசம்பர் - 21, 22, 2016 (மார்கழி 6,7)

காலை கணபதி ஹோமம், கோபூஜையுடன் தொடங்கி ஸ்ரீசந்தான கோபால கிருஷ்ணஹோமம், சுதர்சன ஹோமம், வீரஆஞ்சநேயஹோமம், தேவி திருக்கல்யாணம், ஆராதனை விழா, திருவீதியுலாவுடன் நடைபெறுகிறது. பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.